**மண்முனை மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் மண்முனை மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,969,646 தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சரியான தொகை அடையாளம் காணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை தொகையை சரியாக கணக்கிட முடியாதமையால் இத்தொகையை நிலுவையாக் காட்டப்பட வில்லை. |
| (ஆ) | முத்திரை தீர்வை ரூபா 4,755,101 தொகை கணக்குகளில் காட்டப் பட்டிருக்கவில்லை. | சரியான தொகை அடையாளம் காணப்பட்டு கணக்குகலுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை தொகையை சரியாக மதிப்பீடு செய்ய முடியாமைய்யினால் இத்தொகையை நிலுவையாக் காட்டப்படவில்லை. |

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செலவுக்கடன் வழங்குனரில் ரூபா 1,873,377 தொகை இதுவரை காலமும் சீர்செய்யப்படாது செலவுக் கடன் வழங்குனரில் காட்டப்பட்டு வருகின்றது. | விரைவில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத் தொகையினை உரிய முறையில் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

### 1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 74,654,941 தொகை பெறுமதியான 05 விடயங்களுக்கு காணி உறுதிகள், சொத்துப் பதிவேடுகள் இருப்பு பதிவேடுகள், உரிமைப் பத்திரங்கள், போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | குரித்த சொத்துப் பதிவேடு பதிவுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு, இருப்பு பதிவேடுகள் எமது சபையில் பேணப்பட்டு வருகின்ற போதிலும் அதில் சீரான தகவல்கள் இன்மையால் எதிர்வரும் காலத்தில் மேற்குறித்த நிலையான சொத்துகள் தொடர்பாக அவற்றுக்குரிய காணி உறுதி மற்றும் உரிமைச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருவதோடு மேற்குறித்த பதிவேடுகளில் சீராக பதியப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| (ஆ) சம்பள மீளளிப்பு ரூபா 2,234,160 இறுதிக் கணக்கில் நிலுவையாக காட்டப்பட்டுள்ள போதிலும் அதற்கான உறுதிப்படுத்தல்கள் சான்றுகள் எதுவும் இல்லை. | விரைவில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 41(2) | 1,199,000 | மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அமைச்சின் செயலாளரது அனுமதி பெறப்படவேண்டியிருந்தும் அவ் அனுமதி பெறப்படாது வாகனக் | எதிர் காலத்தில் சரியான முறைமை பின்பற்றப்பட வேண்டும் | எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தி பொருத்தமான நடைமுறைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு இடம்பெற்றிருந்தது. | | பின்பற்றப்படும் |
| (ஆ) நிதி அமைச்சின் 2016 மார்ச் 17 திகதிய வரவு செலவுத்திட்ட சுற்று நிருப இல 1/2016 இன் பிரிவு 5.2 | | முன் அங்கீகாரம் பெறப்படாமல் கப் வாகனக் கொள்வனவு இடம்பெற்றிருந்தது. | எதிர் காலத்தில் இடம் பெரும் வண்ணம் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இடம்பெறாவண்ணம் சரியான நடவடிக்கைகளை பின்பற்றுவேன் என்பதனை அறியத்தருகின்றேன். |
| (இ) 2006 ஆம் ஆண்டு அரச பெறுகை வழிகாட்டு | | | | |
| (i) 2.11.1 (இ) பிரிவு | 1,924,275 | பெறுகை நடைமுறையின் போது பெறுகைக்கால அட்டவணை , பெறுகை முறை மற்றும் விலைக்கேள்வி ஆவணத்தின் வகை என்பன பற்றி உடன் படுவதற்குப் பெறுகைக்குழுவுடனும், தொழில்நுட்ப மதீப்பீட்டுக் குழுவுடனும் கூட்டாக ஒரு முதலாவது கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்தும் அக்கூட்டம் நடை பெற்றிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி கடைபிடிக்க வேண்டும். | எதிர்வரும் காலங்களில் 2006 ஆம் ஆண்டு அரச பெறுகை வழிகாட்டு (ஐ) 2.11.1 (இ) பிரிவுக்கு அமைவாக மேற்குறித்த இரண்டு குழுக்களும் ஒன்றிணைந்து கூட்டாக முதலாவது கூட்டம் நடாத்தி தீர்மானங்கள் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ii) 3.4 (ஊ) பிரிவு | 1,099,650 | கூறுவிலைகளுக்கான வேண்டுகோள்கள் முகவரியிடப்படும் உத்தரவாதங்கள் சுட்டிக்காட்ட வேண்டியிருந்தும் அதற்கு மாறாக கூறுவிலை கோரப்பட்டிருந்தது | எதிர்வரும் காலங்களில் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் 2006 ஆம் ஆண்டு அரச பெறுகை வழிகாட்டு 3.4 (ஊ) பிரிவிற்கு அமைவாக சரியான கேள்வி நடைமுறைகளை பின்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) 2018 யூலை 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட 34 ஆவது பிற்சேர்க்கை யின் 2.14.1 பிரிவு | ரூபா 200,000 தொகைக்கு மேற்பட்ட வாகன திருத்தச் செலவு தொடர்பான முன் அனுமதியினை அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறவேண்டியிருந்த போதிலும் இதற்கு மாறாக சபையினால் 53-8521 பிக்கப் வாகனம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியான நடவடிக்கை பின்பற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் 2018 யூலை 09 ஆம் திகதி வெளியடப்பட்ட 34 ஆவது பிற்சேர்க்கையின் 2.14.1 பிரிவிற்கு அமைவாக சரியான நிதி நடைமுறைகள் பின்பற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த மற்றும் மீளாய்வாண்டில் செய்து முடிக்கப்பட்ட ஐந்து ஒப்பந்த வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 740,586 தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், அவ்வழங்குனர் களிடமிருந்து "வற் பற்றுச்சீட்டு" (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இந் நடவடிக்கை முறையாக பின்பற்றப்பட வேண்டும். | இவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,295,664 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,190,480 ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | அரவிடப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | அரவிடப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | - | -- | -- | -- | - | -- | -- | -- |
| வாடகைகள் | 3,011,052 | 3,011,052 | 3,011,052 | -- | 2,000,000 | 4,379,628 | 4,379,628 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,024,061 | 1,024,061 | 1,024,061 | -- | 1,250,000 | 1,264,365 | 1,264,365 | -- |
| ஏனைய வருமானம் | 37,065,372 | 37,065,372 | 38,457,841 | -- | 8,500,000 | 3,661,077 | 3,661,077 | - |
| மொத்தம் | 41,100,485 | 41,100,485 | 42,492,954 | | 11,750,000 | 9,305,070 | 9,305,070 | |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பட்டியலிடப்பட்ட வருமானம் | | |
| சபையினால் பட்டியலிடப்பட்ட வருமானம் கணிப்பிடப்படாது குறித்த வருடத்துக்காக அறவிடப்படும் தொகையை வருட வருமானமாக கொள்வதால் அறவிடவேண்டிய மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் பெரவேண்டிய வருமானத்தை தணக்கிட பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் நிலையில்லா வருமானம் எதுவும் நிலுவையாக கனக்குகலில் காட்டப்பட வில்லை. |
| (ஆ) வீதவரி | | |
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி வீதவரி அறவிடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும் சபையின் எல்லைக்குள் உட்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்கள் என வர்த்தமானிப்படுத்தி மீளாய்வாண்டில் வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் | | |
| சபைக்கு சொந்தமான 07 நூலகங்களுக்காக 02 நூலகர்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணி காணப்பட்ட போதிலும் இதுவரை காலமும் ஒரு வெற்றிடம் நிரப்பப்படாது காணப்படுகின்றது. | ஆளணியை அங்கீகரிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இன் நூலகங்களுக்கு நூலகர்கள் இர்ராததந் காரணம் ஆளணியை அனுமதிக்காததே ஆகும். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான 16 வாகனங்களுக்காக அனுமதிக்கப்பட்ட சாரதிகள் 06 ஆகக் காணப்பட்ட போதிலும் 02 பேர் மாத்திரமே காணப்படுவதால் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சாரதி வெற்றிடங்கள் 04 காணப்படுகின்ற போதிலும் அவற்றை நிரப்புவதற்க ஆளணி வெற்றிடங்கள் தொடர்பாக பல தடவைகள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் அறிவித்த போதிலும் இது வரை ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலைமை காணப்படுகின்றது |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கப்படும் போது பிணை பெறப்படாது ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. | குத்தகைக்கு வழங்கப்படும் போது ஆதனப்பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் ஆதனப்பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பல்வேறுபட்ட சொத்துக்கள் மற்றும் இருப்பு பொருட்கள் பாவனைக்கு உகந்த மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள் என | எதிர் காலத்தில் இன் நடவடிக்கை முறையாக பின்பற்றப்பட வேண்டும். | பொருட்களை விற்பனை செய்வதற்கு முறையான அனுமதி பெற்றுக்கொண்டு அவற்றை விற்பனை |

| | | |
|---|---|---|
| பலவகையான பொருட்கள் காணப்படுகின்ற போதிலும், அவற்றை அடையாளப்படுத்தி திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான Hand Tractor ஒன்று, land Vehicle 02, Tractor tailor 02 என்பன திருத்தி பயன்படுத்தக கூடியதாகக் காணப்பட்ட போதிலும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது காணப்படுகிறது. | இயந்திரப் பொறியியலாளரின் ஆலோசணை பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான Hand Tractor – 01, Land Vehicle – 02, Tractor Tailor - 02 வாகனங்கள் திருத்தி பயன்படுத்தக்கூடியதாகக் காணப்பட்ட போதிலும் இவ் வாகனங்களில் Hand Tractor – 01 தவிர்ந்த ஏனைய வாகனங்கள் தற்போது திருத்தப்பட்டு பாவனையில் இடப்பட்டுள்ளது. Hand Tractor – 01 திருத்த முடியாத நிலையில் காணப்படுவதால் அவ் வாகனத்தினை இயந்திரவியல் பொறியியலாரின் பொறியியலாளர் அறிக்கை பெற்றுக்கொண்டு அதனை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (இ) Hand tractor ஒன்று மற்றும் Tractor tailor ஒன்று என்பன 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டிலிருந்து பாவனையற்றுக் காணப்பட்டிருந்தும் அதனைப் பதிவழிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரப் பொறியியலாளரின் ஆலோசணை பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனத்தினை இயந்திரவியல் பொறியியலாரின் பொறியியலாளர் அறிக்கை பெற்றுக்கொண்டு அதனை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

### 3.3.2 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தை பெறத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான நான்கு கடைகள் மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்படாததால் அண்ணளவாக ரூபா 99,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டும் இவ்வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எப்படியாவது வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இக் கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையினால் வளங்கள் மற்றும் சேவைகள் செயற்பாட்டிற்காக பெறுகைத்திட்டம் தயாரித்து அதற்கமைவாக செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும். |